Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.386/2021

**Depositions of PW- 8**

| Name | திரு. கருத்தப்பாண்டி | Occupation | சார்பு ஆய்வாளர் |
|---|---|---|---|
| Father's name | சுந்தர்ராஜன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22nd day of June 2026.

22.06.2026

எதிரிகள் ஆஜர்.

**சாட்சி வீடியோ காணொளி மூலம் ஆஜரானார்**.

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னை அண்ணாசாலை காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு 26.05.2020 அன்று திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் மாணிக்கம் என்பவரால் பதிவு செய்யப்பட்ட நிலைய குற்ற எண்.742/2020 பிரிவுகள்.147, 294(b), 323, 324, 506(1) இதச வின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து எனது விசாரணைக்கு வைத்த வழக்கு கோப்பினை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 12.00 மணிக்கு சம்பவயிடமான திருவில்லிபுத்தூர் ரைட்டன்பட்டி தெருவிலுள்ள காளியம்மன்கோவில் அருகே சென்று சாட்சிகள் கோவிந்தராஜ் மற்றும் இருளப்பன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தேன். **வரைபடம் அசாஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

இவ்வழக்கின் சாட்சிகளாக செல்வராஜ், புஷ்பராணி, சேவியர், மெக்கலம்மாள், பாக்கியராஜ், கோவிந்தராஜ், இருளப்பன் மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் மாணிக்கம் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே

வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கின் விசாரணையில் சம்பவம் உண்மை என தெரியவந்ததில் எதிரியை தேடி சென்று அன்றைய தினமே இவ்வழககின் எதிரிகளுள் ஒருவரான ஜெயசிங்குராஜா என்பவரை திருவில்லிபுத்தூர் ஆத்துக்கடை சந்திப்பில் வைத்து கைதுக்கான காரணம் கூறி கைது செய்து நிலையம் அழைத்து வந்து திரேக பரிசோதனை செய்து பாராவசம் ஒப்படைத்தேன். நீதிமன்ற கட்டளைகளை பின்பற்றி நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். இவ்வழக்கின் மற்ற எதிரிகள் விருதுநகர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் சிஆர்எம்பி எண்.1152/2020, 1153/2020, 1154/2020 ன்படி முன்பிணை பெற்றதால் கைது செய்யவில்லை. மேலும் இவ்வழக்கில் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் பிரியதர்ஷினி மற்றும் மனோஜ் ஆகியோர்களை விசாரித்து காயச்சான்றிதழ் பெற்று தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கின் விசாரணை முடித்து 26.09.2020 அன்று பிரிவுகள்.147, 294(b), 323, 324, 506(1) இதச வின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

இவ்வழக்கின் சாட்சிகளான மெக்கலம்மாள் மற்றும் பாக்கியராஜ் ஆகியோர்களை விசாரித்தபோது அவர்கள் இவ்வழக்கு சம்பவம் பற்றி கேள்விப்பட்டு தெரிந்துகொண்டதாகத்தான் கூறினார்கள் என்றால் போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் இவ்வழக்கில் பாதி சம்பவத்தை நேரில் பார்த்ததாகவும் பாதி சம்பவத்தை கேள்விப்பட்டதாகவும் கூறினார்கள். இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் மாணிக்கத்தை நான் விசாரித்தபோது மேற்படி புகார் கொடுப்பதற்காக ஏற்பட்ட காலதாமதத்திற்கான காரணம் பற்றி என்னிடம் கூறவில்லை என்றால் சரியல்ல. வாதியால் தாமதம் என்று கூறினார். மேற்படி வாதியால் தாமதம் என்று சிறப்பு சார்பு ஆய்வாளர் கூறியதாக என்னால் கூறப்படும் சங்கதிகள் அவரது 161(3) வாக்குமூலத்தில் உள்ளதா என்றால் வாக்குமூலத்தில் குறிப்பிடப்படவில்லை.

மேற்படி சாட்சிகளான மெக்கலம்மாள் மற்றும் பாக்கியராஜ் ஆகியோர்களின் வாக்குமூலத்திலும் அவர்கள் பாதி சங்கதிகளை நேரில் பார்த்ததாகவும் பாதி சங்கதிகளை கேள்விப்பட்டு தெரிந்துகொண்டதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. வாக்குமூலத்தில் அதுபற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. வரைபடத்தில் 4 வதாக குறியீடு செய்யப்பட்டுள்ள கோவிந்தராஜ் பலசரக்கு கடையின் வாசலானது கிழக்கு பக்கம் பார்த்து

அமைந்துள்ளது என்றால் சரிதான். பார்வை மகஜரில் 8வது வரியில் கோவிந்தராஜ் பலசரக்கு கடை வடக்கு பார்த்த வாசலுடன் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கின் 1 முதல் 5 எதிரிகள் ஒரே குடும்பத்தை சேர்ந்த அண்ணன் தம்பிகள் என்றால் சரிதான். இவ்வழக்கின் சாட்சி புஷ்பராணியின் மகன் வனராஜை இவ்வழக்கின் சாட்சியாக விசாரணை செய்யவில்லை என்றால் விசாரித்தேன் ஆனால் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. புகார்தாரரும் எதிரிகள் தரப்பும் சமரசம் ஆகாததால் தான் இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கில்தாக்கல் செய்யப்பட்டுள்ள விபத்து பதிவேட்டில் காவல்துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

உண்மையில் இவ்வழக்கு சம்பவம் நடைபெற்றிருந்தால் சம்பவத்தன்றே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்திருப்பேன் என்றால் சம்பவம் நடந்தது உண்மைதான். புகார்தாரர் வீட்டில் கலந்துபேசிவிட்டு புகார் கொடுப்பதாக கூறியதால் தாமதம் ஏற்பட்டுள்ளது. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பார்வை மகஜர், வரைபடம் போன்ற ஆவணங்கள் இவ்வழக்கிற்காக பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து எதிரியை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் எவ்வித புலன் விசாரணையும் மேற்கொள்ளாமல் புகார்தாரரின் தூண்டுதலின் பேரில் எதிரிகள் மீது இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.